**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**

**அ.வ எண்: 185/2019 வேணுகோபால் (வாசா1) தேதி:28.10.2025**

**வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 1,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

இந்தவழக்கின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் இந்தவழக்கில் வாதியின் கணவர் என்றால் சரிதான். எனக்கும் வழக்கின் வாதிக்கும் 2002 ம்வருடம் திருமணம் நடந்தது. எங்கள் திருமணத்தின் போது வாதியின் வயது என்ன என்றால் 21 முடிந்துவிட்டது. இந்தவழக்கு 8 இலக்கச்சொத்துகளுக்காக தாக்கல் செய்யப்பட்டது. வழக்குச்சொத்துக்கள் ஆதியில் சங்கரலிங்கரெட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சங்கரலிங்கரெட்டியார் 1955 ம்வருடம் இறந்துவிட்டார். சங்கரலிங்கரெட்டியாரின் மனைவி பெயர் வள்ளியம்மாள். அந்த வள்ளியம்மாள் என்பவர் எந்தஆண்டு இறந்தார் என்றால் சங்கரலிங்கரெட்டியார் காலத்திற்கு முன்பே இறந்துவிட்டார். சங்கரலிங்கரெட்டியாருக்கு 3 பெண்மக்கள் ஒருஆண்மகன் வாரிசுகள் என்றால் சரிதான். அதில் பொட்டையம்மாள் என்ற குமரக்காளுக்கு ஒரு பெண்வாரிசு மட்டும் உண்டு என்றால் சரிதான். சங்கரலிங்கரெட்டியாரின் 2 வது மகள் புன்னம்மாள் என்பவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 ஆண்மக்கள், 1 பெண்மகள் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி 4 நபர்களில் 2 ஆண்மக்களும் ஒருபெண்மகளும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். பொட்டையம்மாள் என்ற குமரக்காளின் கணவர் பெயர் ஓவுரெட்டியார் என்றால் சரிதான. பொட்டையம்மாள் என்ற குமரக்காள் 1975 ம்வருடம் இறந்துவிட்டார். ஓவுரெட்டியார் அவரது மனைவி காலத்திற்கு முன்பே இறந்துவிட்டார். பொட்டையம்மாள் என்ற குமரக்காளின் மகள் சென்னம்மாள் என்பவரின் கணவர் பெயர் குமராண்டிரெட்டியார் என்றால் சரிதான். சென்னம்மாள்–குமராண்டிரெட்யார்

என்பவருக்கு 5 பெண் வாரிசுகள் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** 1,4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.